# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2407/02 - 2024 ඔක්තෝබර් මස 22 වැනි අඟහරුවාදා - 2024.10.22

*2407/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தம் செய்தல்**

திருத்த இலக்கம் 06

கீழ்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014, ஒகத்து மாதம் 28 ஆந் திகதிய 1877/27 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழ்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,**
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

*2024, ஒற்றோபர் 22.*


1A - G 42948 — 05 (2024/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பகுதி** I

*திருத்த இலக்கம் 01 - 2015, யூலை மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 1925/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 02 - 2016, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய மற்றும் 1996/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 03 - 2018, ஓகத்து மாதம் 03 ஆந் திகதிய மற்றும் 2082/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 04 - 2019, ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய மற்றும் 2137/89 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 05 - 2021, யூன் மாதம் 22 ஆந் திகதிய மற்றும் 2233/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

**பகுதி** II

7.2.2.1 (இ) பிரிவினையடுத்து கீழ்வரும் குறிப்பு உள்ளடக்கப்படுகின்றது :

**குறிப்பு** :

சேவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக் கல்வித் தகைமைகளின் கீழ் கவனம் செலுத்தப்படும் பட்டப் பாடநெறிகள் குறித்து அப்பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். மேலும், ஒவ்வொரு பதவிக்கும் உரிய ஆட்சேர்ப்புக் கல்வித் தகைமைகள் மற்றும் பட்டப் பாடநெறிகள் குறித்து அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலிலும் குறிப்பிடப்படும். ஏதேனும் ஒரு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுடன் பொருந்தும் வண்ணம் குறித்த பதவிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் இற்றைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளை ஏற்புடைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வற்கான கல்வித் தகைமைகளாகக் கருதுதல் வேண்டும்.

7.2.4.1 எழுத்துப் பரீட்சையின் கீழான விடயங்களுக்குப் பதிலாகக் கீழ்வரும் முறையில் பதிலீடு செய்யப்படுகிறது.

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவுப்பரீட்சை | 100 | 40 |
| பொது வினாத்தாள் | 100 | 40 |

(எழுத்துப் பரீட்சைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள் பின்னிணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.)

7.3.2.1 கல்வித் தகைமைகளின் கீழான விடயங்களுக்குப் பதிலாகக் கீழ்வரும் முறையில் பதிலீடு செய்யப்படுகிறது.

சேவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக் கல்வித் தகைமைகளின் கீழ் கவனம் செலுத்தப்படும் பட்டப் பாடநெறிகள் குறித்து அப்பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். மேலும், ஒவ்வொரு பதவிக்கும் உரிய ஆட்சேர்ப்புக் கல்வித் தகைமைகள் மற்றும் பட்டப் பாடநெறிகள் குறித்து அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலிலும் குறிப்பிடப்படும். ஏதேனும் ஒரு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுடன் பொருந்தும் வண்ணம் குறித்த பதவிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் இற்றைப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளை ஏற்புடைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான கல்வித் தகைமைகளாகக் கருதுதல் வேண்டும்.

*02 ஆம் பின்னிணைப்பின் கீழான விடயங்களுக்குப் பதிலாகக் கீழ்வரும் முறையில் பதிலீடு செய்யப்படுகிறது.*

**02 ஆம் பின்னிணைப்பு**

திறந்த போட்டிப் பரீட்சைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டம்

01. நுண்ணறிவுப் பரீட்சை - காலம் 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்.

பரீட்சார்த்தியின் தர்க்கவியல், பொது அறிவு மற்றும் தீர்மானமெடுக்கும் திறன் போன்ற விடயங்களைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்படும் இவ்வினாத்தாள் 50 பல்தேர்வு வினாக்களைக்கொண்டிருக்கும்.

02. பொது வினாத்தாள் - காலம் 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.

இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார சூழல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறும் நவீன விடயங்களையும், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பிலான புரிதலையும் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பொது அறிவினை அளவிடும் வினாத்தாளாகும். வினாத்தாள் 2 பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதி சுருக்க வினாக்களினால் அமையப் பெற்றது. 25 புள்ளிகள். இரண்டாம் பகுதி பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களினால் அமையப்பெற்றது. 8 வினாக்களில் 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். 75 புள்ளிகள்.

EOG 10-0194